செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத்-அஎ]   யாழ்ப்பாணம்: இராக்ஷத ஸு சித்திரை மீ கஉ-உ வெள்ளிக்கிழமை (25-4-1975)   [இலை: ௩

# புத்தளத்தில் ஈழப் பெரியார்கள் நினைவுவிழா

## இந்து மகா சபையின் எழுச்சியான தொண்டு

'ஈழத்துத் தமிழ்ப் பெரியார்கள் பலர் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் அரும் பணி யாற்றினார்கள். நாவலர், விபுலானந்தர், சோமசுந்தரப் புலவர் முதலிய புலவர்கள் ஆற்றிய ஈடிணையற்ற தொண்டுகளை நாம் ஒருபோதும் மறந்து விடமுடியாது''.

இவ்வாறு புத்தளம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. P. [illegible] அவர்கள் புத்தளம் இந்து மகாசபையின் ஈழத்துப் பெரியார்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: ஈழமணித்திருநாட்டின் புதல்வர் பலரின் தொண்டுகளால் மொழியும் கலாசாரமும் வளர்ந்து வந்திருக்கின்றது என்பதனைச் சரித்திரம் கூறுகின்றது. நாமும் இப் பணிகளில் சிறிதளவாவது செய்து வரவேண்டியது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைப் பரீட்சைக் காரியதரிசி திரு. சி. சீவரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து உரையாற்றினர்.

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

உ
விளம்பரம்

### நிர்வாகக்காரியதரிசி

சைவபரிபாலன சபையினதும் சைவபரிபாலனசபையின் நிருவாகத்தில் உள்ள புண்ணியநாச்சி மடாலய தருமம் கார்த்திகை நட்சத்திரமடாலய தருமம் ஆகியவற்றினதும் அலுவல்களைச் செய்வதற்கு ஓர் நிர்வாகக் காரியதரிசி தேவை;

விண்ணப்பிப்பவர்கள் 50 வயதிற்குமேற்படாதவராய் முன் அனுபவம் உள்ளவர்களாய் சைக்கிளில் சென்று அலுவல்களைக் கவனிக்கக் கூடியவராய் ஆர்வமுடையவர்களாய் சைவபரிபாலன சபையின் கொள்கைகளுக்கு முரண்படாதவராய் இருத்தல் அவசியமாகும். சம்பளம் ரூபா 150-விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில், செயலாளர் சைவபரிபலான சபை 450 காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 30-4-75 க்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் விண்ணப்பம் தேவையான முழுவிபரங்களுடன் முன் அனுபவம், நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் ஆகியவற்றுடன் இருக்கவேண்டும்

வை. இரகுநாதமுதலியார்
செயலாளர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம் 7-4-75

# நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
[ எழுதி உதவியவர் சி. சீவரத்தினம். ]

### (2) கோயில் (முன் வளர்ச்சி — 7)

நாவலர் பிரபந்தத்திரட்டில்;
நல்லூர்க் கந்தசுவாமிகோயில்;-

இந்தியாவிலோ வித்துவான்கள் சைவசமய குருமார் முதலியோருள்ளுங் கந்தபுராண முதலியன அறிந்தவர் சிலர்; இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவையறியாதார் சிலர்.

இந்தியாவிலே சைவசமயிகளுளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவர்களுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையெனிற் கூறுதும்: எத்துணைக்காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதிலகணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்களுள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்.

இந்தியாவிலோ பெரும்பான்மையோர்களுக்குக் காடன் மாடன் கறுப்பன் வீரன் பெரியதம்பிரான் முதலிய பிசாசுகளே குலதெய்வம்; இத்தேசத்திலோ பெரும்பான்மையோர்களுக்கு எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமு முடைய நமது சுப்பிரமணியக் கடவுளே குலதெய்வம்;

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

# சைவ பரிபாலன சபைச் சரித்திரம்

### (ஐம்பதாம் வருடப் பூர்த்திப் பொன்விழாமலரிற் பத்திரிகாசிரியர் கூற்று 1938)

சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்திரே,

1. சைவ பரிபாலன சபையின் உற்பத்திக் காரணம்.

ஈழமண்டலத்தின் வடபாகத்திலுள்ள சைவத் தமிழ்நாடாகிய யாழ்ப்பாணமானது தன்னை நீடித்த காலமாகப் பரிபாலித்துவந்த ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையினராகிய தமிழரசரின் ஆட்சிக்குப்பின் பறங்கியர் கையிலும் அதன் பின் ஒல்லாந்தர் கையிலும அகப்பட்டது. சுயமதப் பிராந்தி கொண்டவர்களாகிய அவ்வந்நிய அரசர்கள் சைவக்கோயில்களையும் மடங்களையும் ஏனையசைவத் தாபனங்களையும் இடித் தழித்து சைவ மதத்தினர்க்கு இடர் விளைத்து அவர்களைத் தம்மதமாகிய கிறிஸ்துவ மதத்தை அநுசரிக்கும் படி பல நிஷ்டூரங்களை அக்காலத்திருந்த எங்கள் முன்னோர்களுக்குச் செய்தார்கள்; இதனால் அவர்களுட்சிலர் அந்நியமார்க்கத்தைக் கைகொள்ள வேண்டியவராயினர்: இன்னும் பலர் சாக்கிய நாயனார் போல அகத்தொரு மதமும் புறத்தொருமதமுமாய் அநுசரித்து வந்தார்கள்; வேறுபலர் ''கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே'' என்ற முறைப்படி இந்

( வளர்ச்சி 8-ஆம் பக்கம் )

# தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்

## எல்லாச் சமயங்களும் இறைவியின் ஆக்கமே!

— "சைவ சித்தாந்த போதகர்" —

"உலகத்திற்குக் கருத்தா சிவபெருமான்" -சைவவினாவிடை. 'அங்ஙனமாயின் ஏன் எல்லோரும் சிவனை வணங்குவதில்லை'! பலர் மனதிலும் பல தடவை தோற்றி மறையும் கேள்வி.

மனிதர்க்கு மனிதர் உணவில், உடையில், மொழியில் வித்தியாசம். அவரவர்செய்த வினைக்கேற்ப எல்லாம் அமைகின்றன. சோதிடர் சாதகத்தைப்பார்க்கின்றார்; சொல்லிவிடுகின்றார். கன்மத்திற்கு ஏற்பவே தனு கரண புவன போகங்கள். உணவில், உடையில் வேறுபாடு இருப்பினும் பயனில் ஒருவகைத் திருப்தி காணப்படும்.

பிறவா யாக்கைப் பெரியோன்சிவபெருமான். அவனை வழிபடுவோரே பிறவா யாக்கை பெறும் பேறுடையர்! புண்ணியம் செய்தோர்க்கே அப் புண்ணியம் வாய்க்கும். ஒருவன் பல்வேறு சமயங்களிலே பிறந்து அவற்றை முறைப்படி அநுட்டித்த பலனினாலே ஈற்றில் சைவசமயியாகின்றான் என்பது சைவம். அவரவர் செய்த கன்மத்திற்கேற்பப் பல்வேறு சமயங்களை இறைவன் இறைவியைக்கொண்டு ஆக்குகின்றார். "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்பது திருக்களிற்றுப்படியார். அவரவர் புண்ணிய பாவ வினைப் பயனுக்கு ஏற்பப் பல்வேறு சமயங்கள், தெய்வங்கள், வழிபாடுகள்.

ஒரு கலாசாலை. அங்கே பல்வேறு வகுப்புக்கள். ஒன்று முதலாம்வகுப்பு; மற்றொன்று பத்தாம் வகுப்பு. இரண்டும் ஒன்றாகவும் வேறாகவும் காணப்படும். எல்லா வகுப்புக்களும் கலாசாலையிலே தேவை. எல்லாச் சமயங்களும் உலகத்திலே தேவை. பிறவா யாக்கைப் பெரியோனை நினைக்கத் தக்க தகுதியுடையார்க்குரிய சமயம் சைவம். சைவம் இறுதி வகுப்பு. அதனால், அதிலே நிற்போர் தமது வகுப்பின் பலனை அநுபவிப்பதுமன்றி ஏனைய வகுப்புக்களின் பலனையும் ஒருங்கே அநுபவிக்கின்றனர்.

சைவத்திலே நான்கு படிகள் ஒன்றிற்கு ஒன்று உயர்ந்தவை. ஞானம் உயர்ந்த படி. அதனைப் படிக்கிரமமாகக் காரண காரியத் தொடர்பு காட்டி உரைக்கும் முதனூல் சிவஞான போதம்.

x x x

காரணமின்றிக் காரியமில்லை, உலகம் காரியம். காரணம் மூன்று வகை. முதற் காரணம் மாயை, துணைக் காரணம் சத்தி. நிமித்த காரண கருத்தா சிவம்.

உலகம் பிரத்தியட்சப் பொருள்; காட்சிக்குப் புலனாகும். இறைவன் நமக்குப் புலனாவதில்லை. ஞானிகளே அறிவர். அவனருளாலேயே அவனை அறியலாம். மழை பெய்யும் என்கின்றார் முதிய

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

# இந்துமத தத்துவ இலக்கிய மேதை

## கலாநிதி இராதாகிருஷ்ணனின் பிரிவாற் கலையுலகு கவலையுற்றது

[ திரு. சி. குமாரசாமி எம். ஏ.
ஆசிரியர், விவேகானந்த ம. வி. அநுராதபுரம்]

சிலவாரங்கட்கு முன்னர் இங்கிலாந்தில் அதிக பணத் தொகை கொண்டதும் அதி கௌரவத்துக்கு முரிய ஒரு பரிசு கலாநிதி இராதா கிருஷ்ணனுக்கு வழங்கப்பட் டதை நேயர்கள் நன்கு அறி வர் அப்போது இராதாகிருஷ் ணன் அவர்கள் உடல் நலங் குன்றியிருந்தமையால் இங் கிலாந்து செல்ல முடியாத நிலையில் அப்பரிசை இந்தியத் தூதுவர், தத்துவஞானியின் சார்பாகப் பெற்றுர் இப்பரிசு இராதகிருஷ்ணன் அனேக நூல்கள் மூலமாகவும் சொற் பொழிவுகள் மூலமாகவும் இந்திய தத்துவத்தையும், சமயங்களையும் பற்றிய அறிவை வாரிவழங்கியதற் காகவும் கொடுபட்டது இங் துக்களாகிய நாம் இந்நிகழ்ச்சி பற்றிப் பெருமையும் பூரிப் பும் அடைவதற்கிடையில் காலன் அவர் உயிரைப் பறித்துவிட்டான்.

இன்று இந்தியதத்துவ ஞானம் உலகெங்கனும அறி யப் பட்டு வருகிறது இதற்கு அனேகர் காரணமாயிருந்த போதிலும் சுவாமி விவே கானந்தரையும் தத்துவ மேதை இராதாகிருஷ்ணனை யும் விசேடமாகக் குறிப்பி டல் வேண்டும் 1893 ம் ஆண் டில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வ சமயமகா நாட்டில் சொன்மாரி பொ ழிந்து அமரிக்கர்களையும் ஐரோப்பியர்களையும் விழிப் படையச்செய்தவர் விவேகா னந்தரே! இந்து சமயத்தில் வெறும் மூடநம்பிக்கைகள் தானுண்டு என்று இறுமாப் புற்றிருந்த மேனுட்டினர் திகைத்தனர் இந்துசமயத்தை யும் தத்துவத்தையும் அறிய வேண்டும் மேலும் அறிய வேண்டும் என்னும் பேரவா வினுல் விவேகானந்தரை அமரிக்க நாடெங்கணும் சொற் பெருக்காற்று மாறு வேண்டினர். புதினத்தாள் கள் இந்துமதச் சூறவளி (Hindu Cyclone) என்று சுவாமியின் சொற் கொண் டலை வர்ணித்தன வேத, உப நிடதகருத்துக் களையும் கீதையின் நிஷ்காம கர்மத் தையும் மேனுட்டினர் உண ரத்தலைப்பட்டனர்.

ஆனல் இந்துமதத் தத்துவ மனைத்தையும் சிறந்த முறை யில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட பெருமை தத் துவ மேதையாம் இராதா கிருஷணனையே சாரும் மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் சிறந்த தத் துவ சமய, கலாசாரத் தூதுவராக விளங்கும் இரா தாகிருஷ்ணன் அரசியல் வானிலும் சுடர் விட்டுப் பிரகாசித்து இந்தியக் குடிய ரசின் ஜனுதிபதியாகக் கட மையாற்றிப் புகழ்பெற்றவர் பிளேற்றோவின் தத்துவ ஞானிகளே நாட்டினை அர சாளவேண்டும் என்ற கருத் துப்படி இந்தியநாட்டின் ஜனுதிபதியாகி உலகநாடெங் கணும் சென்றபோது இரா தாகிருஷ்ணனுக்கு இராச மரியாதை கொடுக்கப்பட்

வளர்ச்சி 6 ஆம் பக்கம்

### 50 ஆண்டு நிறைவு

கீரிமலை வீரசைவ குரு: ச. தற்பராநந்த தேசிகர் அவர்கள் குரு அபிடேக ஐம்பதாண்டு நிறைவுவிழா நாளை 26-4-75 சனிக்கிழமை மாலை 5-00 மணியளவில் கீரிமலை மாரியம்மன் தேவ ஸ்தானத்தில் நடைபெறும்.

திரு, வ. சரவணமுத்து அவர் களது தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரமஸ்ரீ கு பால சுந்தரக்குருக்கள். திருவாளர்கள்: க. நல்லைநாதன், கு முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, நம. சிவப் பிரகாசம் ச. நடேசன், தங்கம்மா அப்பாக்குட்டி, கை. நமசிவா யக் குருக்கள், வ. கந்தையா, கா. கதிர்காமத்தம்பி, ந நடராசா, செ. சரவணமுத்து, மு. சிவராஜ ரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த துவார்கள்,

இவ் விழாவையொட்டி வெளி யிடப்பட்டிருக்கும் "ஸ்ரீ வடுக பைரவ கவசம்" என்னும் நூலை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவாகளும், பொன். கருணுகரர் அவர்களும் வெளியிட்டு வைப் பார்கள்.

### நாவலர் கருத்துக்கள் பரவ உழைப்பதில் முன்னின்ற பெரியார்

சரசாலைப்பதி தந்த தரும சீலர் பொன்னுச்சாமிப் பெரியார்

சைவப் பெரியார் சரசாலை திரு. ச. பொன்னுஸ்வாமியவர்கள கவலைக்கிடமான வகையில் அண் மையில் சிவபதம் அடைந்தனர் என்பதை அறிந்து மிகக் கவலைப் படுகின்ருேம். இப் பெரியார் மலேசியாவில் கடமையாற்றி இளைப்பாறிய பின்பு தாய்நாட டுக்கு வந்து சிறந்த முறையில தமிழ்ப் பணியும் சைவப்பணியும் புரிநதனர். இவர் எங்கள் சைவ பரிபாலனசபையில் நிருவாகசபை அங்கத்தவராய் இருந்து அரும பணி ஆற்றினர். புலோலி திரு. G. சுப்பிரமணிய முதலியார அவர்கள் சிதம்பரம நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை நிருவாகத்தை நடத்திய காலத் தில அவருக்குப் பேருதவி புரிந் தார. அவருக்குப் பின் மேற்படி வித்தியாசாலை நிருவாக உததி யோகத்தராகவும் கடமையாற்றி ஞர். நமது நாட்டில் அரசாங்கம் பாடசாலைகளைத் தேசிய மயமாக கியபொழுது வண்ணுர்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தி யாசாலையையும் அதன் சொத்துக் களையும் பொறுப்பேற்றது மேற்படி வித்தியாசாலையில் நாவ லருடைய கொள்கைப்படி சைவ சமயமும் தமிழ் மொழியும் ஊட் டப்படுவதற்கு ஐந்து உறுப்பினர் களை அங்கமாகக கொணட ஒரு தர்ம பரிபாலன சபை நிறுவப் பட்டது. இப்பெரியார் அச்சபை யிலும ஒரு அங்கததவரா யிரு ந்து வித்தியாசாலை அபிவிருத திக்குப் பேருதவி புரிந்தார்.

தமது சொந்தக் கிராமத்தில் பெருந தொகைப பணம் செலவு செய்து ஒரு அம்மன் கோவிலை யும் நடதது வந்தார். மேற்படி கோவிலில் ஒரு நடராஜர் திரு வுருவமும் இவருடைய முயறசியு ஞல் நிறுவபபடடுளளது. இப பெரியார நிருவகித்து வந்த இத திருக்கோவிலை வேத சிவாகம முறைப்படி நிருவகிதது வருதல சரசாலை மக்களின கடமையா கும். அப் பெரியாருடைய ஆன்மா சாந்தி பெறுவதாக.

### உமாபதி சிவாசாரியார் குருபூசை

பொன்னிவளந் தருசோழ நன்ருட்டிற்
புகழ்மலியும் புலியூர் தன்னின்
மன்னுமறைக் குலமகிழ மா முனிவர்
போற்றிசைப்ப வனிதை பாகன்
சொன்ன சிவாகமம் விளங்கத் திருவுடையந்
தணர்மரபி லொருவர் தோன்றிப்
பன்னரிய அபிதானம் உமாபதியார்
எனவெவரும் பரவப் பெற்ருர்

உமாபதி சிவாசாரியார் குருபூசை 24-4-75 வியா ழக்கிழமை அன்று யாழ்ப்பாணம் சைவபரிபலான சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது சபை சிவபூசா மண்டபத்தில் சிவபூசை நிகழ்ந்த பின்பு நடராஜப் பெருமாஞுக்கு விசேட பூசை நிகழ்ந்தது. தமிழ் மறையோதியபின் உமாபதி சிவாசாரியார் புராணபடனம் நடைபெற்றது.

### பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

சிதம்பரப்பிள்ளை மகள் கணேஸ்வரி - பொலிகண்டி வளக்காளி

இல. 12647

எதிராக

1. சிவசுந்தரம் சோதி அருணுசலம் தலைவர் நெடிய காட்டு விளையாட்டுக் கழகம் வலவெட்டித்துறை
2. சின்னக்குஞ்சு சின்னத்தம்பியும்
3. பெண ஆசசிமுத்துவும்

பொலிகண்டி
எதிரிகள

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று பொலிகண்டிக் குறிச்சி இறையிலுள்ள இராமன் செம்பாடு எனனும் நில 23 கொண்ட ஆதனத்துக்கு

1951 ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட் டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலககத்தில் ஓர் பிரி விடுதல் வழக்கு தொடாந்திருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஞூ வைகாசி மாதம் 6 ந் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட் டளை பண்ணபபட்டிருக்கிறுர்கள்

தயாரித்தவர்
சி. செல்லையா
வழக்காளியின் சட்டத்தரணி
1975-ம் ஞூ சித்திரை மீ

கோட்டாரின் கட்டளைப்படி
ஒப்பம் த. மகேந்திரன்
பதிவாளர்.
2 25-4

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன் துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 25—4—1975 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்

## சைவபரிபாலன சபை

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

நாட்டில் இருத்தலை விடுவித்துத் தென்னிந்தியாவுக்குச் சென்று அங்குள்ள வேதாரணியம் சிதம்பரம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களில் வாழ்ந்து கொண்டு தங்கள் சமயத்தை இனிது அநுட்டித்து வந்தார்கள். அதன்பின் பறங்கியர் ஒல் லாந்தர்களின் கொடுங்கோன்மை நீங்கி இந்நாடு ஆங்கிலர் பரிபலானத்தின் உட்பட்டது: கருணணியம் பொருந்திய ஆங்கில ரெனிலோ, எச்சமய வாதிகளும் தத்தம் சமயத்தை எவ்வகையான இடையூறுமின்றி அநுட்டித்து வரலாகும் என்ற கொள்கையுடன் பரிபாலனஞ் செய்து வந்தார்கள். இதனைக் கண்ட இங்கிருந்த சைவமக்கள் முன்னர்ப் பறங்கியராலும் ஒல்லாந்தாலும் இடித்துத் தகர்க்கப்பட்ட பல ஆலயங்களை பழையபடி அமைத்தார்கள்: சைவசாதனங்களை யெல்லாம் புதுபிததார்கள்! எவரும் காணும்படி சிவசின்னங்களைத் தரித் துக்கொண்டு உலாவினுர்கள்; கந்தபுராணம் முதலிய புராணங் களைக் கோயில்களிலும திருமடங்களிலும் ஏனைய சுத்தமான தானங்களிலும் படனஞ் செய்தார்கள்; சைவத்தின் மகத்து வத்தை இப்புராண படன வாயிலாக மெல்ல மெல்ல உணர்ந் தார்கள்; பறங்கியர் காலத்திலும் தமிழ்க் கல்வி மாத்திரம் வளர்ச்சி குன்றவில்லை; அப்படியான தமிழை மேலும் மேலும் மேலும் வளர்த்து வந்தார்கள்.

இப்படி நம் மூதையர் முயற்சி செய்துவருங் காலத்திலே "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டவாறுய்" இந் நன்முயற்சி களுக்கிடையில் அமரிக்க பாதிரிமாரும் ஏனைய ஐரோப்பிய பாதிரிமாரும் தம்சமயத்தை இந்நாட்டிற் பரப்பும் நோக்கங் கொண்டு இங்கே வந்து புகுந்தார்கள்: இப்பாதிரிமார் வரவைக்கண்ட இந்நாட்டு அபிமானிகள் பறங்கியர் ஒல்லாந் தரைக் காட்டிலும் இவர்களை இட்டுப் பெரிதும் அஞ்சவேண் டியவர்களானுர்கள்; ஏன்? பறங்கியர்கள் ஒல்லாந்தர்கள் தம் சமயத்தை வெளிப்படையாகப் பரப்ப முயன்றுர்கள்; இப்பா திரிமா ரெனிலோ உள்ஒன்று வைத்துப் புறம் பொன்று கொண்டு கருமமாற்றத் தலைப்பட்டன. இவர்கள் தம்முடைய சமயத்தைப் பரப்புதலாகிய நோக்கத்தை அந்தரயாகவைத் துக் கொண்டு நமது அரசினர் இங்குள்ள மக்களுக்கு ஊட்ட முயன்ற கல்வியின் பொறுப்பைத் தாங்கள் ஏற்று நடத்துவ தாக அரசினரைக் கேட்டார்கள். நமது அரசினர் புத்திபூர்வ மாகவோ, அபுத்தி பூர்வமாகவோ நாம் அறியோம், அக்கல் விப் பொறுப்பை இப்பாதிமார் தோளிற் சுமத்திவிட்டார்கள் அதிகாரத்தை "கொள்ளிய னல்லான்மேல் வைத்தால் குரங்கின் கைக் கொள்ளி கொடுத்து விடல்" என்ற பிரகாரம் இக்கல் விப் பொறுப்பைப் பாதிரிமார் பெற்ற மாத்திரத்தே ஊர்க டோறும் பள்ளிக் கூடங்களை அமைத்துச் சைவசமயத்திற்கும், செந்தமிழ் மரபிற்கும் மாருக, தங்கள் சமயத்திற்கு அநுகூல மாக, அரசினர் உதவும் அரசிறை வருவாய்ப் பணத்தில ஒரு பெரும் பாகத்தை உதவி நன்கொடைப் பணமாகப் பெற்றுக் கொண்டு தம் சமயப் பிரசாரணம் செய்யத் தொடங்கினுர்கள் கிறீஸ்தவர்க ளல்லாதாரைத் தங்கள் பள்ளிக்கூடங்களிலே இப்பாதிரிமார் உபாத்தியராக நியோகிக்கமாட்டார்கள்; விபூதி பூசிக்கொண்டு தம் பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளை வரவிடமாட்டார்கள்; சைவநிந்தனை விரவியனவாய், கிறிஸ் துமத போதனைக்கு உரியனவாய்த் தாம் எழுதிய பாடபுத்த கங்களை யல்லாமல் வேறு பாடப்புத்தங்களைப படிக்கப் பிள்ளை களை விடமாட்டார்கள்; பிள்ளைகளின் பெற்ருரையுஞ் சுற்றத் தவர்களையும் அப்பிள்ளைகளின் முன்னிலையிலே 'அஞ்ஞானிகள்' என்று வாய்கூசாதிகழ்ந்து பேசிவந்தார்கள்; இன்னும இப்பா திரிமார் அக்காலத்திலே செய்து வந்த அக்கிரயங்கள் பல! சுருங்கச் சொல்லுஇல் சைவர்களாய மற்சங்களைப் பிடித்தற் காகத் தஞ்சமயமாகிய தூண்டிலே கல்வியென்ற இரையை மாட்டி இவர்கள் கருமஞ் செய்து வந்தார்கள் என்று சொல் லுதல் சாலும். இத்தூண்டிலிற் பல மற்சங்கள் அகப்பட்டு மாண்டது நிசம்.

வளர்ச்சி 6-ம் பக்கம்

Registered as a Newspaper in Ceylon G.P.O. [illegible]

Supplement to the "INTHUSATHANAM"

Price 20 Cts.

Our Work is Our Advertisement

Saiva Prakasa Press

INTHUSATHANAM

(The Hindu Organ)

( The only Newspaper in Ceylon for the Hindus )

PUBLISHED EVERY FRIDAY

FOR BOOKS ON SAIVAISM

Dial 356

Saiva Prakasa Book Depot

Estd. Sept. 11, 1889 ⌘ JAFFNA, FRIDAY APRIL 25, 1975 ⌘ PHONE No. 356

# The Saiva Paripalana Sabhai: Its History, Aims and Ideals

BY

**Siva U. Somasegaram M. A., Ed., F. R., Econ. S.**

It was over eighty seven years ago that the Saiva Paripalana Sabhai was inaugurated. As its name implies, it was founded for the propagation of the Saiva Siddhanta Faith and for the defence of Saiva interests in Jaffna in particular and Ceylon in general.

Little is known of the state of Saivaism during the period of what may be called the military occupation of Ceylon by the British during the first half of the nineteenth century. The Government was inclined to be more liberal and to concede some of the rights of the indigenous population of Ceylon, their religions and their cultures, during the latter half of the century but the Missionaries who had followed the British flag and had built up a religious and cultural hegemony, suppressing the indigenous religions and cultures were loth to part with their powers. Their influence was so great that the battles had to be fought continuously and ground gained almost inch by inch.

The first to start the fight for the religious and cultural rights of the Saivites of Ceylon was the doughty champion of the Saiva Faith, the late Sri la Sri Arumuga Navalar who has created a tradition of religion culture and literary scholarship, that will last as long as Tamil and Hinduism exist in Ceylon. Brought up in a Christian Missionary atmosphere, he became a master craftsman and challenged them with a fair measure of success in their own ground. His field of work extended to South India also and he was hailed as a Saiva Revivalist and the father of Tamil prose. He had unfurled the flag of revolt against the dominance of Christianity and Western Culture and the movement gained momentum towards the end of the nineteenth century. It would be of interest to note that this was a phase of British Rule and similar revivalist movements were launched in the Buddhist areas of Ceylon and in India also.

The founders of the Saiva Paripalana Sabhai owed their inspiration to this champion of the Saiva religion and Tamil Culture. The flag of revolt unfurled by him had to be held high until final victory was won and the rights of the Tamils and the Saiva Faith were firmly established in our country. The nephew of the great Navalar was the first President and after an year he handed over the reins to more doughty fighters who could carry on the struggle in a more modern fashion. Mr. T. Chellappapillai B A., B. L. retired Chief Justice of Travancore was the next President and with him were associated Mr. V Casipillai, Crown Proctor, Mr. S M. Pasupathy Chettiar and towering above them all, Mr. S. Nagalingam Advocate, Mr. T. Kailasapillai the heir to the Navalar traditions was also in this group. The Sabhai had among the guides and workers a number of legal, political and religious luminaries among the Tamil Saivites. Among them may be mentioned Sir Ponnambalam Ramanathan, Mr. P. Kumaraswamy, Sir A. Kanagasabai, Mr. S. Kandayya. Proctor, Sir W. Duraiswamy, Speaker of the State Council, Mr S. Sivapathasundaram the lucid exponent of Saiva Siddhanta and its culture, Mr. A. Ambalavanar Proctor, Adigar A. Naganathar, Mr. A. Thillaiampalam Mr. R. Sivagurunathar Proctor, and Chairman of the Jaffna Urban Council and the last but not the least Mr. T. Muttusamipillai, Barrister at law and Crown Advocate. They had sedulously safeguarded the Navalar tradition and though occasionally they had to diverge from the main goals, they had this tradition as their main guide and have so far kept it intact.

The field of work of the Saiva Paripalana Sabhai naturally varied with the times The Saiva community was evolving both socially and politically and the Sabhai had to vary its scope and methods. Its work might be described under the following heads.

## Saiva Religion

The Sabhai was founded to 'manage' the Saiva Religion and it had never hesitated to advocate the Saiva Siddhanta in its pure form. There were many phases of the Hindu Revivalist movement. The Arya Samaj, the Brama Samaj and the Ramakrishna cult of Vedantism, did yeoman service in the beginning, Sri Aurobindo, Tagore. Ramana Rishi, Ram Das, Sivananda and others had their impact on Hinduism in our land and are continuing to do so even today, witness the Ramakrishna group and branches of the Divine Life Society. Other popular movements like the Y. M. H. A. the opposite number of the Y M C. A and Y. M. B A, Saiva Societies and Hindu Associations have sprung up in our land and are doing very useful work, among the younger generation in particular. The Sabhai however as the oldest and only incorporated society has in duty bound to keep

Over to page 4)

# Future of Religions – in Spiritual Socialism

By

**H. H. Maharshi Shuddhananda Bharathi**

President, Yoga Samaj, Madras

( Continued from last issue )

Sincere service is worship. The felicity of all is his happiness. He lives for all in collective consciousness. The all-ness of the individual is the basis of real socialism. The socialist works for his livelihood and enjoys the fruit of his labour with society. 'Society above self': is his watchword. One must feel an equal with all. Give and enjoy what you get by work. Identify the individual with the collective man. Let the soul breathe for society, feel with the universe and share with others amicably: is the aim of spiritual socialism. The flower blossoms in the peace of the morning, its beauty is a poem of grace. Its smile is an ecstasy of self giving. It gives away its perfume for the health of all. The songful bees drink its honey. The bee-hive is busy with work Each bee has its work, and the work is dedicated to social harmony. Society is "soul-consciousness", and the soul is "God-consciousness." That is the pattern of socialism that can do good to India and to humanity. This socialist government – Sama Rajya – takes a part of the people's revenue as tax in order to give back the same in the form of several public works and benefactions, just as the sun draws the vapour from the ocean, in order to pour it back as blessed rain.

Spiritual socialism is a battery of two forces. One is material and the other spiritual. Science is the glory of the material force, and Yoga that of the spiritual force. Yoga is a psychic science which trains the intellect, the mind, the heart, the nerve and the body of perfect harmony. Yoga is a science of "better-world-liness", as said by the holy Founder of Dayalbagh, in tune with the Infinite Spirit, that is the core of all beings. Yoga lays down the foundation of One World and One Humanity, because it realises in meditation the Unique One, that is the All. Upon this unity of consciousness we can make a social order of life in which everyone works for the good of all, in which there is no profiteering, individual egoism, or totalitarian greed. Material life, scientifically set upon spiritual consciousness, is the unique remedy for the several disabilities that assail humanity today. We hear everywhere today the clamour for peace and disarmament, behind it we hear loud reports of hydrogen bombs and atomic explosions. We cannot stop war until there is a vital transformation in man. War begins in the vital mind of foul passions and ambitions. Spiritual socialism is the only panacea for the war-worn world, for, it is an outflowering of the equal spirit in all.

The picture of Dayalbagh and the spirit of devotion which animates the work and the workers here, give me the feeling that Dayalbagh has a message not only for India, but for the entire humanity. I think that it is on these lines that the whole world has to work to get peace. The Leader of Dayalbagh (His Holiness: Mehtaji Maharaj) is an extraordinary personality, who inspires the hearts of the workers here for all kinds of work.

There is a false belief prevalent among the Sannyasins in this country that the work in

( Over to page 4)

### THOUGHTS TO BE TREASURED

கன்னபுரமாலே கடவுளிலும் நீ அதிகம்
உன்னிலுமோ யான் அதிகம், ஓதக்கேள்—முன்னில்
உன்பிறப்போ பத்து, உயர் சிவனுக்கு ஒன்றும்இல்லை,
என்பிறப்போ எண்ணத் தொலையாதே.

Oh! Mal of Kannapuram, you are greater than the great God, but I am greater than you. If you want to know the reason why, please listen. You have ten births while the Supreme Sivan has none but my births are incapable of being counted.

திருச்சிற்றம்பலம்
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, APRIL 25, 1975

## GREETING THE GIANT

We, in commencing the eighty seventh volume of the Inthusathanam and the Hindu Organ, are placed in the enviable position of greeting the Giant Year—Rakshatha. Having happily completed a full and fruitful cycle of sixty years we are midway in the second round. Hence we feel confident that having once previously survived the Rakshatha Year the present New Year also will be accommodating enough not merely to ourselves but also to the people of Lanka.

In our inspired effort to serve religion and language with the noble ideals of the Great Navalar before us ever reminding us of our duty, we have always been advocating the lofty principle of god fearingness which in simple language means devotion to Dharma. Thus it is but a further step in our continuous service spread over four decades when we greet the Giant Year.

Our eighty seventh year will, therefore, be more energetic in the effort to make Rakshatha yield giantlike success.

## Personality Par Excellence

The illustrious name—Dr. S. Radhakrishnan has become synonymous with ideal life. He belonged to the whole world and will continue to be acclaimed as a universal personality. Scholarship, intellectual excellence and success as a statesman alone would have made him a personality *par excellence* but above all, his understanding of religion and the philosophic presentation of his spiritual knowledge entitle him to be a leader of humanity.

Lanka retains lovely memories of this outstanding leader and Yalpanam treasures with pride the pearls of spiritual wisdom that formed the string of speeches which he delivered at the Esplanade. Dr. Radhakrishnan has a permanent place in the history of humanity.

## LECTURE ON LAND POLICY

In the ninth meeting of the South Asian Studies Seminar, held at the Jaffna Campus Thirunelvely, on March 29th, Mr. N. Shanmugaratnam, National Science of Sri Lanka read an interesting and thought-provoking paper on "Land policy and land use in Sri Lanka". A lively discussion followed and many from the audience participated.

## The Saiva....

(From page 3)

the flag flying of Saiva Siddhanta in its pristine form as expounded in the Saiva Agamas and exemplified by the lives of the Saiva Saints. It has to be the final authority on the interpretations of the Saiva Agamas and Saiva Religion and propagate it, perhaps not as the only one that could lead us on to salvation but as the most suitable way of life against the background of our history and tradition, for our community. Tamil scholars and able exponents of Saiva Siddhanta have joined the ranks of the Sabhai and are very ably performing this task.

(To be continued)

## Future of...

(From page 3)

fields and factories is an obstruction to spiritual advancement, but, here in Dayalbagh, I find religion and religious spirit actually inspiring and permeating all secular efforts thereby giving religion a new life and demonstrating practically, that a balanced development in the spiritual and the material fields is essential for the progress and well-being of humanity. **From this point of view, Dayalbagh has shown humanity a new path, which no spiritual preceptor has so far been able to demonstrate practically.** The way in which you balance your labour and effort with service and prayer is the only way whereby the soul of India, which is at present chained in manifold bondage, can find deliverance. Dayalbagh having evolved this method is giving a lead to the country in this direction, and thus it can make the body and soul of India healthy.

I can visualise this Satsang spreading out one day all over the entire country.

# Past Year and Next Year

M. ELIATHAMBY. B. A.

The Past reminds us of happy and sad experiences and the Future is full of anxieties. The joys and sorrows of the past often haunt our minds. Our successes and failures, our achievements and triumphs, our short-comings if there were any are experiences for us to ponder over if we had swerved from the right path in the past our conscience begins to prick us. We have to make an assessment of our past actions and question ourselves "Have we discharged our obligations?" in the year that has ended. All the trials and tribulations and certain bitter experiences make us realise our own blunders.

The Past does not return but provides a good lesson for a person to gather more knowledge of both men and things and helps him to face misfortunes in life with mental fortitude. The experiences of the past will not produce the same effect in the minds of each person. A nervous or excited man becomes worse if he had met with sour experiences. A religious person becomes more devoted to God for he might realise that his prayer only helped him to survive such storms and adversities in the past. A man of wisdom and knowledge takes a saner view of things that had gone a poor and uneducated man shudders at the very thought of the past. In brief, prosperity and luck enliven one's spirit. Misfortunes and calamities cause depression. To take both happiness and sorrow alike is possible to only a few.

Next year is that which follows the previous year. The birth of a New Year brings lot of hope for all A student hopes to pass his examination. A young man hopes to get a job. An unmarried person entertains the hope of a prosperous marriage. A sick man wishes to recover from his illness. The poor and the helpless hope for a better period to follow. After the dawn of the New Year all wish to have the food scarcity to disappear. The farmer expects plenty of rain and a good harvest. Some traders hope to earn more money in the open market and some in the black market. "Hope springs eternal in human breast" so says a great poet.

If any of us had misspent the past we should realise that a precious past of a short span of human life had been lost and therefore we should make a determination to utilise the future in the best possible manner. Evaluation of one's past actions enables one to improve himself and to lead a happier life with hopes of prosperity. Each and every citizen should work hard forget hatred and animosities and use nature's blessings for the betterment of human progress. A drunkard should resolve not to drink. A lazy and indolent person should make up his mind to work hard. The affluent must be more helpful to the poor.

Sometimes money seems to be a more active earner of money than the owner of the money himself. Money lenders and business magnates should try to invest a part of their money in a productive undertaking which will be useful to the nation at large without spending some of their time in speculations and calculations. If some of these are the New Year resolutions, there won't be famine or starvation, no scarcity of food but there will be a better economic and social order and the possibility of establishing an egalitarian society will not be far off. Let the New Year usher in a period of prosperity and happiness for all.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday April 25, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

## புத்தளத்தில் ........

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

பண்டைக் காலப் புலவர்களும், இக் காலத்தியவர்களும் சமய நம்பிக்கையுடையவர்களா யிருந்துள்ளனர் என்பதை வரலாறுகள் மூலம் நாம் அறியலாம். சமய நம்பிக்கை யில்லாத கல்வி பயன்படாது என்றும் இளைஞர்களாகிய வருங்காலச் சந்ததியினர்க்கும் சமய நெறியுடன் கூடிய கல்வியறிவைப்புகட்டி வரவேண்டியது அவசியமெனவும் குறிப்பிட்டார்கள்.

திரு. சி. சிவரத்தினம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சமயகுரவர், நாவலர் போன்ற பெரியார்கள் எமக்குச் சிறந்த வழிகாட்டிகளாவர். சைவ சமய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டிச் சமயத்தை நிலைநாட்டினர். நீதியுடனும், நேர்மையுடனும் அருந்தொண்டாற்றியவர்; 'மேன்மை கொள் சைவ நீதியை விளங்க வைத்தனர் 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தி யின்பம் பெறும் பொருட்டேயாம்' என நாவலர்பெருமான் காட்டியவாறு சமய நெறி நின்று நற்பயன் பெறுவோமாக.

"தமிழுக்கா சைவத்திற்கா நாவலர் சிறப்பிடங் கொடுத்தார்" என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டி மன்றத்திற்கு சைவபரிபாலன சபைப் பரீட்சைக் காரியதரிசி திரு. சி. சிவரத்தினம் தலைமை வகித்தார்.

கண்ணகி வழக்குரைத்தல், பக்தன் பிரகலாதன், இளங்கோ துறவு என்ற நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஈழத்துப் பெரியார்பற்றிய பேச்சுக்களிலும், பட்டிமன்றத்திலும், நாடக நிகழ்ச்சியிலும் இந்து மகாசபையில் பயிலும்மாணவர்களே கலந்து சிறப்பித்தமை போற்றற்குரியதாகும்.

செயலாளர் திரு. ஆ தியாகராசா (நீர்ப்பாசன இலா) அனைவர்க்கும் நன்றிகூறினர்.

இச் சபை சொந்தக்காணியில் 1961 ஆம் ஆண்டு கட்டிடம் அமைத்து வாரந்தோறும் சமய வகுப்புகளை நடாத்தி வருவதும் குறிப்பிடக் கூடியதாகும். இதன் பொறுப்பாளராக புத்தளப் செட்டித் தெருவுக்கு அண்மையிலுள்ள திரு. ந. நமசிவாயம் (அரசாங்க நில அளவையாளர்) கடமை செய்து வருகின்ருர்.

—

மேலைப் புலோலி ஸ்ரீ வே. தா. சிவபுண்ணிய சிவகுருநாதனின் தர்மபத்தினி திருமதி சிவகாமசுந்தரி அவர்கள் 29-12-74 ஆருத்திரா தரிசனவேளையில் இறைவனடி சேர்ந்தார்கள்.

## நாவலரும் - கோயிலும்

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

நல்லூர்க்கந்தசுவாமி கோயிலார்களே!

உங்கள் கோயிற் கட்டடமும், அங்கே விக்கினேசுசப் பிரதிட்டை இல்லாமையும், மூலமூர்த்தி உற்சவமூர்த்திகள் சுப்பிரமணிய விக்கிரகங்களாகாது வேலாயுதங்களாய் இருத்தலும், வேலாயுதங்களுக்குத் தேவிமாராகப் பக்கத்திலே தெய்வானையம்மை வள்ளியம்மை விக்கிரகங்கள் வைக்கப்படுதலும், தீக்ஷை பெருத பிராமணர்களே பூசை செய்தலும், பிறவுஞ் சிவாகம விரோதம் என்றும், இக்குற்றங்களைத் திருத்தல் வேண்டும் என்றும், நாம் உங்கள் கோயிலதிகாரியாய் இருந்த தமபு என்னும் வழக்கப் பெயரையுடைய இரகுநாத மாப்பாணருக்குப் பல்முறை அறிவித்ததும், 1847 ஆம் வருஷத்துக்குச் சமமாகிய பிலவங்க ஹு ஆடி மாதம் வீளவேலி வேதக்குட்டிக் குருக்கள் உங்கள் கோயிற்றிருவிழா நடத்த வந்திருந்த போது அவர்களெதிரே அவ்விரகுநாத மாப்பாணருக்குப் போதித்ததும், நீங்கள் அறிந்த தில்லையா?

(இப்பொழுது நாவலருக்கு வயசு 24½ இன்னும் நாவலராக வில்லை. வேலாயுதங்களென்றது அம்புவடிவங்களை)

உங்கள் கோயில் சிவாகம விரோதம் என்பதையும் அதனைத் திருத்துதற்கு நீங்கள் உடன்படாமையும் அறிந்து பிலவங்க ஹு ஆடி மாதம் முதலாக இருபத்தைந்து வருஷகாலம் அக்கோயிலுக்கு வரசது விடுத்த நாம் ஆங்கிரச ஹு (1872) ஆனி மாதம் உங்கள் கோயிலுக்கு வரத்தொடங்கியது உங்களால் அழைக்கப்பட்டா அழைக்கப்படாதேயா? நீங்கள் நம்மை அழைத்தது நம்பொருட்டா? உங்கள் பொருட்டா?

உங்கள் கோயிலிலே உங்கள் கோயிற் பிராமணரல்லாத மற்றெருவரும் புராணத்துக்கு அருத்தஞ் சொல்லக்கூடாது என்னும் நியமத்தை நீங்களே நீக்கிப், பிராமண சாதியேமல்லாத நம்மை வலிந்து பிரார்த்தித்து, விசேஷ காலங்களில் அழைத்துக் கொண்டு போய் அருத்தஞ் சொல்லுவித்தது எதன் பொருட்டோ?

நாம் உங்கள் கோயிலிலே முதல் அழைக்கப்பட்டுத் தெய்வானையம்மை திருக்கல்யாணத்துக்குப் பொருள் சொல்லி முடிந்தவுடனே, அக்கோயிலில் வேலாயுதஅம்புப்பிரதிட்டை ஆகம விரோதம் என்றுஞ் சிலாவிக்கிரகந் தாபித்தல் வேண்டும் என்றுஞ் செய்த பிரசங்கத்தை நீங்கள் மகிழ்ந்து கேட்டதும், நமது போதனை கேட்டு நல்லூர்ப் பொன்னம்பல பத்தர் சென்ன பட்டணத்தினின்றும் வருவித்த சிலா விக்கிரகங்களை நீங்கள் உங்கள் கோயிலிலே பிரதிட்டை செய்விக்க உடன்பட்டே திருவிழாக்காலத்தே உபசாரத்தோடு உலகறிய உங்கள் கோயிலினுள்ளே சேர்த்ததும் இல்லையா?

உங்களுள்ளே கந்தையாமாப்பாணர் ஆயிரங் கடிதம் அச்சிற் பதிப்பித்துப் பரப்பி, ஆங்கிரசஹு (1873) தை மாதம் 7 ந் திகதி சனிக்கிழமை இராத்திரி உங்கள் கோயிற் சந்நிதியில் ஒரு சபை கூட்டவில்லையா? (இவர் பின் வந்த அதிகாரி இவர் அடிமனத்தால் நாவலா வழி நின்றவர். வெளிமனத்தைச் சிற்றினம் கொள்ளை கொண்டு விட்டது.)

அந்தச் சபையிலே எல்லாரும் அறியக் கந்தைய மாப்பாணர் செய்துகொண்ட வேண்டுகோளின்படி, நாம் சுப்பிரமணியக் கடவுளுடைய இலக்கணங்களை விரித்துப் போதித்து, அதன் பின் உங்கள் கோயிற் கிரியைகள் ஆகம விரோதம் என்றும். அக்கோயிற் கருப்பக் கிருக முதலியவைகளைப் பிரித்து ஆகமப்பிரகாரங் கருங்கல்லினலே கட்டுவித்து விக்கிரகப் பிரதிட்டை செய்வித்தல் வேண்டும் என்றும், பிரசங்கிக்க வில்லையா?

(வளரும்)

## அறிவித்தல்

காகிதம், மை, மற்றும் அச்சகச்செலவுகள் அதிகரித்ததன் காரணமாக சைவபரிபாலனசபையார் 1889ம் ஆண்டு முதல் வெளியிடும் 'இந்துசாதனம்' தமிழ் ஆங்கிலப்பிரசுரங்களை ஓரே பத்திரிகையாக நான்கு பக்கங்களில் மேமாதம் முதல் வெளிவரும் என்பதைச் சந்தாதாரர்களுக்கும், வாசர்களுக்கும், சைவாபிமானிகட்கும் அறியத்தருகிமுேம்;

பத்திரிகைகளை அச்சிட அதிக செலவு ஏற்படுவதால் சந்தாதாரர்களை தங்கள் சந்தாவை 1975 சித்திரை முடியும் வரை கொடுத்து, எமது பத்திரிகைகளை ஆதரிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சைவபரிபலான சபையிற் புதிதாகச் சேரும் அங்கத்தவர்கட்கும் ஆயுள் அங்கத்தவர்கட்கும் 1975ம் ஆண்டு முதல் புதிய விபரப்படி சந்தா செலுத்தும் அங்கத்தவர்கட்கும் இந்துசாதனம் பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும் 1975 தை முதல் புதிய சந்தா விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| உறுப்பினர் ஆண்டுச் சந்தா | ரூபா 20/- |
| புதிதாகச்சேரும் உறுப்பினர் பிரவேசம் | ரூபா 5/- |
| ஆயுள் அங்கத்தவர் சந்தா | ரூபா 100/- |

உறுப்பினர் அல்லாதவர்கள் பத்திரிகைச் சந்தா ஆண்டுக்கு ரூபா 18/- இந்துசாதனம் பத்திரிகை பிரதி வெள்ளிக்கிழமைகளில் வெளிவரும்.

இலங்கை வாழ் சைவமக்களின் 1889ம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவரும் சைவமக்களின் ஏகோபித்த குரலான இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களை ஆதரித்து அவை மேன்மேலும் சைவப்பணி புரியுமாறு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் ஆலோசனைகளையும் கொடுக்குமாறு சைபரிபாலன சபையார் அன்புடன் வேண்டிக் கொள்கிருர்கள்.

சைவபரிபாலன சபை — வை. இரகுநாதமுதலியார்
யாழ்ப்பாணம் 7-4-75 — செயலாளர்

## துன்பறு மார்க்கம்

### கந்தபுராணக்கருத்து

சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் அவர்கள்

சூரபன்மன் தனது குமாரனுகிய பானுகோபனைத் தேவர்களோடு போர் செய்ய அனுப்பினுன் அவன் தேவலோகத்துட் சென்ற போது இந்திரனும் இந்திராணியும் அங்கில்லை பானுகோபன் தேவர்களோடு போர் செய்து தேவலோகத்தை தீக்கிரையாக்கினுன் சயந்தனையும் தேவர்களையும் சிறைப்படுத்தினுன் அசுரர்கள் சயந்தனைப் பலவிதமாகத் துன்புறுத்தினுர்கள் அப்பொழுது சயந்தன் சிவபெருமானை நோக்கி வழிபடுவர்களின் பாவங்களைப் போக்குபவரே தேவர்களின் சிந்தனைக்கு எட்டாத சிவனே செழுஞ்சடரே இந்தப்பிறப்பில் இடர் படச் செய்தீர் தேவரீர் தந்திரத்தை யார் கடந்தவர் அடியேன் இடத்தில் பக்தி நெறி சிறிதும் இல்லை எவ்வாறு அருள் செய்வீர் கல்லருள் பொருந்திய உம்மிடத்தில் அன்பில்லாத அடியவன் மிக வருந்திக் கூறியது (எனது அறியாமைத் தன்மையே சிவனே சிவனே இனிச் சுவர்க்க இன்பத்தில் மூழ்காமல் உன் திருவடி நிழலில் இருந்து அடையும் பேரின்பத்தையே அடியேனுக்கு அருள் புரிய வேண்டும்

மாடே சூழ்வார்தம் மொடுமைந்தன் சிறைபுக்கான்
காடே போனுனிந்திரனேனேர் கவலுற்ரு
பாடே விண்ணேர் தம்பத முக்கட்பரனல்கும்
வீடேயல் லாற்றுன்பறுமார்க்கம் வேறுண்டோ

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### வழக்கு இலக்கம். M. B. 8930

1, துரைசாமி கனகலிங்கமும் 2. பெண் இராசமணியும்
செம்பின்ரேட், நல்லூர்.

எதிராக —வழக்காளி

சரவணமுத்து கந்தையா புத்தூர். எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 8930- ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975 - ஆம் ஹு மே (வைகாசி) மீ 15 ஆம் திகதி (15-5-75) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2650/-ம் 15-3-1967 தொடக்கம் 15-9-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 250-99 சதமும இதில் ரூபா 1000/- குறைக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பபாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெற்கு இறை ,அளவெட்டை' "பெரும் கன்னன் சீமழுத்தானடைப்பு" வரகுச்செய்கை நிலப்பரப்பு 21 (Lms) V. C. ம பயிர்களும், கிணறும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும் எல்லை கிழக்கு சோமாஸ் கந்தர் அன்னசத்திரம் ஆதனம். வடக்கு சிவசம்பு சுற்றம்பலமும் மறுபேரினதும் ஆதனம் மேற்கு புத்தூர் விசுவநாத கோயில், தெற்கு விசுவநாதர் சின்னப் பிள்ளையினதும் மறுபேரினதும் ஆதனம். K. 236/ 286 ன் கீழ் பதிவு பெற்றது.

**க. சரவணமுத்து**
கொம்மிசனரும் விலைமதிப்பாளரும.

9 செட்டித்தெரு நல்லூர் யாழ்ப்பாணம்
3-4-75

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ: இல. M. B. 13972

சின்னத்தம்பி தம்பித்துரை, ஊரேழு வழக்காளி

எதிராக

1. கணபதிப்பிள்ளை முததுராசாவும்
2. பெண் அன்னம்மாவும் ஊரேழு எதிராளிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டின் M. B. 13972 ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1975ம் ஆண்டு வைகாசி மாதம் 16 ந் திகதி (16-5-75) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதலும் வட்டியுமாக 2800/ ரூபா இன்னும் 2000/ ரூபாவிற்கு 20-7-1973 — 23-8-1974 வரைக்கும் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதவட்டியும் (12) கூட்டிக் கூடிய தொகைக்கு 23-8-1974 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5 % வீதவட்டியும் கோட்டுச்செலவு 324-67½ சதமும் (நடை பெற்ற செலவு 197-10 நடைபெற வேண்டிய செலவு 71-50 மேலதிக சமயாசமயச் செலவு 56/07½)

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று அச்செழு இறை "வளிநுங்கை" நிலப்பரப்பு (4) நாலு குளி (1½) ஒன்றரை எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தேவசகாயம் பெண் பூரணத்தினுதனம் மேற்கு ஞானசுந்தரம் பெண் அருளானந்தத்துக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரியவாதனம தெற்கு அருளப்பு பெண் பிரகாசியினுதனம் இதடங்கலும்.

**தா. க. பொன்னுத்துரை J.P.**
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

28/1 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷதஸு சித்திரைமீ கஉ-உ வெள்ளி

## வாழ்வாங்கு வாழ.

சித்திரைத்திங்கள் தோற்றியும் மக்கள்மத்தியில் மனகிம்மதிளத்துணையுமில்லையேயென்றுகோற்றுகின்றது. தென்றலையும் காணேம்; இளவேனில் இயங்குவதற் கறிகுறியுமில்லை. நீர் வளங் குன்றி ஏர் வளமும் குன்றி மக்கள் வாழ்வுச் சீர் வளமும் இன்று மென்றால் வாழ்க்கையின் எதிர்காலத்தை எவ்வாறு நோக்கலாமென்று யோசனை மிகுகின்றது.

கடவுளின் கருணையில்லையேற் காலம் கலியாகவே தொடரும் என்று நாம் கூற வேண்டியதில்லை! வாழ்வாங்கு வாழாது சூழ்நிலைக் கேற்பத் துன்பந் தரும இழ் வழியிலே உலகம் சென்றுகொண்டிருப்பதனுல் இறைவன் இன்னருள் எமக்கில்லாதுபோனதுபோலும்!

நாட்டிலேநாடோறும் கொலையும் களவும் காமமிலையும் பொல்லாங்குக்குக் காரணமாகின்றன. பொய் குடி புகுந்துவிட்டது. குருநிந்தனை கொஞ்சமல்ல. எனவே வளமான வாழ் வென்ற தென்றல் வீசுவதற்கு வழியில்லை என நாம் அறிந்து கொள்ளலாம் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது இந்நாட்டிலே மதுவருந்தும் பழக்கம் ஒழிந்தாலன்றி நெறியான வாழ்வு திகழாதென்பது புலப்படும்.

போதைப் பொருள் உபயோகத்தைப் பொல்லாத தீங்கென்று சமயபாடங்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றன இருந்தும் இந்நாட்டு மக்கள் மதுவருந்துவது வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றென்று அதனைத் தழுவுவதற்குக் காரணம் சமய ஒழுக்கம் குன்றியமையே!

இவ்வாண்டிலே சைவசபைகள் மன்றங்கள் மாநாடுகள் ஒரு ஆக்கவேலைபைத்திட்டமிட்டு மதுவை மூற்றாக விலக்குவதற்கு வழி வகுத்தால் மக்கள் வாழ் வாங்கு வாழலாம்,

## சைவபரிபாலன சபை

(2 ஆம் பக்கத்து வளர்ச்சி)

2. ஆறுமுகநாவலர்

இவை இங்ஙனமாக, பிரசண்ட மாருதமென்னும் பெருங் காற்றில் அகப்பட்ட மரக்கலம் நடுக்கடலிலே கவிழ்ந்துவிட அதன் கண் இருந்தோர் அல்லோல கல்லோலப்பட்டுச் சமுத்திரத்திலே மூழ்கும் போது அவர்களுக்கு ஒரு தெப்பம் தெய்விகமாய் அகப்பட்ட தன்மை போலவும், வழுக்கி வீழ்வோனுக்கு ஊன்றுகோல் கிடைத்தாற் போலவும், சைவமக்கள் அந்நியமதத்தினரால் இப்படி இடர்ப்படுங் காலத்திலேயே ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் வந்து உதித்தார்கள் இது தம் அன்பர்களையும் சிவமதத்தையும் பாதுகாக்கும் வண்ணம் இறைவன் செய்த திருவருட் செயல்போலும்! நாவலரவர்கள் சற்சமயமாகிய சைவத்தின் பொருட்டும் செந்தமிழ் மொழியின் பொருட்டும் உழைத்த உழைப்புகள் உலகப்பிரசித்தமானவை அப்பெரியார் தம் காலத்தில் தாம் செய்து வைக்கவேண்டுமென்று நிச்சயித்தவை மிகப்பல அவற்றுள் அவர் காலத்திலேயே நிறைவேறியன பல அவர்காலத்து நிறைவேறுதொழிந்து பிற்காலத்தில் அம்மகானுடைய உள்ளக்குறிப்பின்வழி அவர் மாணுக்க பரம்பரையினராலும் சைவாபிமானிகளாலும் நிறைவேற்றப்பட்டன பல' இங்ஙனம் நிறைவேறியவைகளுள் இச்சைவபரிபாலன சபையும் இச்சபையின் முயற்சியினுற் கிளைத்து இப்போது இச்சபையுடன் தொடர்பற்றும் தொடர்புற்றும் நிலவும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் அதன் கிளை வித்தியாசாலைகளும் நாவலப் பெரியார் நோக்கத்தின்படி அவருக்குப் பிற்காலத்தில் உற்பத்தியானவையாகும், அதாவது நாவலரவர்களுடைய பிரதான நோக்கம் சை சமய முறையிற் சைவப்பிள்ளைகட்கு ஆங்கில தமிழ்க் கல்வியை ஊட்டுவதற்கான ஒரு சைவக் கல்லூரியும் சைவமக்களின் பொருட்டுச் பொதுவாகவும் உழைத்தற்கான ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகளும் இன்றியாமையாதது வேண்டும என்பதாம இந்நோக்கம் அம்மகானின் உள்ளத்திற் குடிகொண்ட பெரு நோக்கமென்பதை நாவலரவர்கள் சீவிய சரித்திரத்தைப் படித்து அறிதல் முடியும்.

II சபையின் உற்பத்தியும் இச்சபையைக் கண்ட பெரியாரும்,

சைவசமயத்தை விடுத்து அந்நிய மதங்களிற் பிரவேசிப்பவர்களுக்கு, அவ்வந்நிய மதங்களிலுள்ள பொருந்தாமையை எடுத்துக் காட்டுவதோடு மாத்திரம அமையாது, நம்முடைய சமய உண்மைகளையும் அந்தியாவசியமம் தெருட்டி அவர்களை பரசமயப் படுகுழியில் வீழவொட்டாது தடுக்கவேண்டுமென்ற மேலான நோக்கங் கண்ட அக்காலத்துப் பெரியார் பலர், நாவலப் பெருந்தகையார்க்குப் பின் அவரை போன்று சைவத்தின் பொருட்டு தமிழ் மொழியின் பொருட்டும் உழைத்து வந்தவரும் நாவலரவர்களுடைய மருகரும் மாணுக்கருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களிடஞ் சென்று இப்பெருங்குறையை முறையிட்டார்கள் இக்குறைகளையிட்டு முந்தியே தம் முள்ளத்திற் சிந்தித்துச் சிந்தித்துக் கவன்று கொண்டிருந்தவராகிய பொன்னம்பலப் பெரியார் அவ்வபிமானிகளுடைய முறையிட்டைக்கேட்ட மாத்திரத்தே பேருவகையடைந்தார்; தம்முடைய சற்குரு நாதரின் பேரபிமானம் இருந்தபடியென்னை யென்று அற்புதமடைந்தார்: திருவருளின் திறத்தைச சிந்தித்து மனம உருகினர்: அவ்வாபிமானிகளுடைய வேண்டுகோட்கு உடனே ஒருப்பட்டார்.

திருவருட்டிறத்தினுலும் மேலே சொல்லப்பட்ட அபிமானிகளின் பெருமுயற்சியாலும் சர்வதாரிஸு சித்திரை மீ 19 திகதி (29- -1888) ஞாயிற்றுக்கிழமையும் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தியும் மூலநட்சத்திரமும், சித்தயோகமும கௌலவகரணமும் கூடிய சுபதினத்திலே, வண்ணார்பண்ணையில் விளங்கும் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலே, யாழ்ப்பாணம் சைவ சமய பரிபாலான சபை என்னும் காரணப் பெயரையுடைய இச்சிறந்தசபை ஸ்தாபிதமாயிற்று அச்சமையத்தில் இச்சபையின் தலைவராகவும் உத்தியோக அங்கத்தவர்களாகவும நிர்வாகசபையாராகவும் நியமனம் பெற்ளோர் பெயர் வருமாறு:-

சபைத்தலைவர் ந. ச. பொன்னம்பலபிள்ளை, இலேககர் காரியதரிசி த. கைலாசபிள்ளை, தனதிகாரி (சிலகாலம்) கு சபாபதிச் செட்டியார், (பின்) அ. சின்னப்பாபிள்ளை கணக்குப் பரிசோதகர் சி. சபாபதிப்பிள்ளை, நிர்வாகசபை அங்கத்தவர்கள்;- மு. கணேச பண்டிதர், வி. சபாபதிக்குருக்கள், ஆ. சுப்பிரமணியபிள்ளை, அதில்லையம்பலம், மு. கந்தையா மாப்பாணமுதலியார், கு. செல்வநாயகம்பிள்ளை, இ. பொன்னம்பலபிள்ளை, இ. வேலுப்பிள்ளை, சி. வேலுப்பிள்ளை, மா வைத்தியலிங்கபிள்ளை ச. பொன்னம்பலபிள்ளை இ, வைத்தியலிங்கபிள்ளை, வே. கனகரத்தினம்பிள்ளை, சு மயிலவாகனபிள்ளை, இ. மயில் வாகனம்பிள்ளை, வெ. மயில்வாகனம பிள்ளை, ச. வீரசிங்கம்பிள்ளை, சி. சரவணமுத்துப்பிள்ளை, வை. கதிர்காமபிள்ளை யென்னுமிவர்களாவர்

முதல் வார்ஷிக மகாசபைக் கூட்டம்

இச்சபையின் முதல் வர்ஷகமகாசபைக் கூட்டம் 1889-ம் ஆ வைகாசி மாதம் 24ந் திகதி நாவலரவர்களது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வத்தியாசாலையிலே கூடிற்று ஏறக்குறைய 500 சனங்கள் வந்திருந்தார்கள். இச்சபைக்குத் திருவானந்தபுர கைகோட்ஜட்சாயிருந்த தா செல்லப்பாபிள்ளை அக்கிராசனுதிபதியாயும் ந. ச பொன்னம்பலபிள்ளையும் அப்புக்காத்து சி. நாகலிங்கபிள்ளையும் பிரதிபக்கிராசனுதிபதிகளாகவும், சுப்பிறீங்கோட் பிறக்ரர் வி காசிப்பிள்ளை இலேககராகவும், த கைலாசபிள்ளை உதவி இலேககராகவும், சித. மு பசுபதிச்செட்டியார் தனதிகாரியாகவும், ச. சபாரத்தினபிள்ளை கணக்குப்பரிசோதகராகவும், சி. சபாபதிப்பிள்ளை, அ. சபாபதிப்பிள்ளை, கா. பொன்னம்பலபிள்ளை வே. கனகரெத்தினபிள்ளை அ திலலையமபலபிள்ளை அ. சன்னப்பாபிள்ளை இ. மயில்வாகனபிள்ளை கு செல்வநாயகம்பிள்ளை மா. வைத்திலிங்கபிள்ளை, இ, மாரிமுததுப்பிள்ளை ஆ சுப்பிரமணியபிள்ளை, ச. சண்முகமபிள்ளை க. வேலுப்பிள்ளை மு. க கணேசபண்டிதர் வி. சபாபதிக்குருக்கள் வே, முத்துவேலுப்பிள்ளை என்னும் பதினறு பேரும் அங்கததவர்களாகவும தெரிவு செய்யபட்டனர். (வளரும)

## நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம்: "பழைய பாணி"

[ பத்தாவது : சிறுதேர்ப் பருவம். ]

(முன் வளர்ச்சி — 75;

பொன்னுருண லிரசதத் தச்சினிற் கோத்துமேற்
புதுமைமிகு பதுமை வரிகள்
புட்பாகம்முதற் போதுநவ மணிகணப்
பொற்பொடு குயிற்றி மேன்மை
பன்னுபவ ளக்கால்கள் பதினறு முறநிறீஇப்
பதுமபீ டஞ்சமைத்துப்
பரவிஞேடு நின்னையர் பாலநிற்கரிதினிற்
பண்ணுதேர் பயனிழப்பத்
தென்னையம் பிஞ்சுசில சிறுபானை யாதிபுனை
சிறுதேர் நயந்த தென்னே
செல்வமிகு வுறினுமா டம்பரம் மேலவர்
சிந்தைசெய் யாதசெம்மை
சின்னவிளை யாட்டினிலு மன்னுமோ ருமை [கொல்
சிறுதே ருருட்டி யருளே
செந்தமிழ் வளங்குலவ வந்தருளிளங்குழவி
சிறுதே ருருட்டி யருளே 2.

## தென்னுடைய சிவன் —

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

வர். குழந்தைக்கு ஓரே வியப்பு. சிறிதுநேரத்தால் மழை பெய்கின்றது. மழை காரியம். அதற்குக் காரணம் கருமுகில். கருமுகிற் கூட்டத்தைக் கண்ட முதியவர் மழை வரும் என்று "சாத்திரம்" கூறுகின்றார், அவர் சொற்படியே மழையும் பெய்கின்றது.

இதே போல உலகிற்குச் சங்கார காரணனுகிய சிவனே முழுமுதற் கடவுள் என்பதைச் சிவஞான போதம் காரண காரியத் தொடர்பு காட்டி விளக்குகின்றது. காரண காரியத்தொடர்பைத் தர்க்க சாத்திரம் விளக்கும். தர்க்க சாத்திர அடிப்படையில் அமைந்த திருநூல் சிவஞான போதம். அதன் சூத்திரம் ஒவ்வொன்றும் பல்வேறு "சாத்திரம்" கூறும். 12 சூத்திரத்திலே 39 அதிகரணங்கள். 39 உண்மைகள் — மெய்கள். ஒவ்வொரு மெய்க்குமுரிய காரண காரியத் தொடர்பைக் கண்டுகாட்டியவர் மெய்கண்டார்.

காரணமின்றேல் காரியமில்லை. காட்சிப் பொருளாகிய கருமுகிலைக் கண்டு காட்சிப் பொருளல்லாதிருந்த மழையைக் காட்டினூர் முதியவர். அவர் கொண்ட அளவை அநுமான அளவை.

சிவஞான போதம் அநுமான அளவைப் பிரமாணத்தை அடிப்படையாகக்கொண்டது. உரை அளவையில் அமைந்த தோத்திர உண்மைகட்குக் காரண காரியத் தொடர்பைத் தர்க்க ரீதியாக விளக்கிக் காட்டுகின்றது.

'தென்னுடைய சிவனே எந் நாட்டவர்க்கும் இறைவன்' என்பதற்குரிய காரணத்தை முதலாம் சூத்திரத்திலேயே கண்டு களிக்கிறோம்..

"அறுவகைநெறிகளும் பிறவுமாக்
இறைவிதன் மலரடி [நிய
இறைஞ்சி ஏத்துவாம்"
— கந்தபுராணம்;

## இந்துமத தத்துவ

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

டது நாமறிவோம் உதாரணமாக அமரிக்க ஜனுதிபதியாயிருந்த காலஞ்சென்ற கென்னடி இவரைப்பற்றிக் கூறுமிடத்து இராதாகிருஷ்ணன் பேசும் போது சிறுகுறிப்புகள் தானும் வைத்திராமல் பேசினூர் மதுவைத் தொடாமலே விருந்துண்டார். கூப்பியகரங்களுடனே இராணுவ மரியாதை ஏற்றூர் என்று புகழ்ந்தது கவனிக்கத்தக்கது.

அகில உலகப் புகழ்பெற்ற இராதாகிருஷ்ணனைக் கௌரவிக்கும் நோக்கத்துடன் அமெரிக்காவிலுள்ள ஒரு நூல்நிலைய ஸ்தாபனம் (The library of living philosophers) வெளியிட்டுள்ள ஒரு பாரிய நூலுக்கு "சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் தத்துவம்' எனப் பெயரிட்டுள்ளது. அந்நூலில் உலகப் புகழ்பெற்ற 23 தத்துவ நிபுணர்களின் ஆய்வுரைகளும், மதிப்புரைகளும் இராதாகிருஷ்ணனுடைய அளப்பரிய சேவைகளை விளக்குகின்றன. பி டி. ராஜு (P. T. Raju) என்னும் தத்துவ ஞானி கூறுவதாவது:

"இராதாகிருஷ்ணனின் சேவையில் முக்கியமானது இந்திய அறிவியற்றுறையிலாகும். அறிவுக்கும் உள்ளுணர்வுக்கும் இடையேயான பிணக்கைத் தவிர்த்து, அறிவின முதிர்ச்சியே உள்ளுணர்வென்று (Intuition) எழுதியவர் இவரே. மேலும், சிலர் அறிவுதான் முக்கியமானதுமல்லாமல் தனித்துவம் பெற்றதென்றும், வேறு சில சமயத்தலைவர்கள் (சங்கரர், பிற்காலப் பௌத்தர்) அறிவை அறவே கண்டித்திருந்தனர். ஆனல் இராதாகிருஷ்ணனின் கூற்றுப்படி தர்க்க ரீதியான அறிவின் முதிர்ச்சியே உள்ளுணர்வு" மேலும் கே. ஜே. ஸ்போல்டிங், டி. ஆர். வீ. மூர்த்தி, கபீர் போன்றோர் ஆய்வுரைகளும், பாராட்டுரைகளும் வழங்கியுள்ள இந்நூலில் இராதாகிருஷ்ணனின் வாழ்க்கையின் ஆரம்ப பகுதியும் அவராற் கூறப்பட்டுள்ளது. இந்நூல் வரிசையில் இடம்பெற்ற சிலர், யோன் டியூயி (Dewey), ஐன்ஸ்டைன், ஜோர்ஜ் சுநதயனு, றசல், வைற்ஹெட் ஆவர் (Whitehead). ஆனுல், கீழைத்தேய அறிஞருள் இந்நூல் வரிசையில் இடம் பெற்ற ஒரே ஒருவர் இராதாகிருஷ்ணனே! இந்நூல்1952ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. [வளரும்)